செ.வெ.எண்: 567 நாள்: 04.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்கும் முறைகள் குறித்த குறும்படம் மூலம் விழிப்புணர்வு பணிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்கும் முறைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தில் திரையிடும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.10.2021) துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் மழைநீரை சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்கும் முறைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தில் திரையிடும் பணிகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களுக்கு மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு குறும்படத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்கும் முறைகளான கூரையின் மேல் விழும் மழைநீரை சேகரித்தல், திறந்தவெளிக் கிணறு மூலம் மழைநீர் சேகரித்தல், குழாய் கிணறு மூலம் மழைநீர் சேகரித்தல், கசிவுநீர் குழிகள், துளையுடன் கூடிய கசிவுநீர் குழிகள் முறை என மழைநீரை சேகரிக்கும் பல்வேறு முறைகள் குறித்து காட்சி விளக்கம் காண்பிக்கப்படவுள்ளது.

மழைநீர் சேகரிப்பின் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும், நிலத்தடி நீரின் தரம் மேன்மையடையும், கடல்நீர் ஊடுருவல் தடுக்கப்படும் மற்றும் மழைநீர் தேங்குவதை தடுக்க இயலும் போன்ற பல்வேறு பயன்கள் ஏற்படும். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக பராமரித்து நிலத்தடி நீர்மட்டம் உயர ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் எம்.அயினான், உதவி நிர்வாகப் பொறியாளர் அய்யாசாமி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சத்தியமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கருணாகரன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**